சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 36/2022

பெயர் திரு. சுதாகரன் த/பெ. **நாள்.** .06.02.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. முதன் முதலில் இவ்வழக்கை நான் மதுராந்தகம் நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்தேன். இவ்வழக்கு முதன் முதலில் செய்யூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பண வரை ஆள் வரம்பிற்காக பிராது திருப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் அந்நீதிமன்ற பெயரைக் கூட மாற்றாமல் இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கு பிராது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புல எண்.150/3ல் கிணறு உள்ளது என்பதை காண்பிப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகள் மின் இணைப்பு, மோட்டார் ஆகியவற்றை போடக்கூடாது என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். நான் செய்யூர் நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கிணற்றுக்கு கீழ்புறமாகத்தான் மோட்டார் உள்ளது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகளும் கிணற்றுக்கு கீழ் புறமாக மோட்டார் அமைத்துள்ளனர் என்றால் சரிதான். புல எண். 150/3 மேற்குத் திசையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். புல எண் 150/3க்கு கிழக்கு திசையில் புல எண். 150/6 உள்ளது என்றால் சரிதான். செய்யூர் நீதிமன்றத்தில் இரண்டு புல எண்களிலும் கிணறு உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் புல எண். 150/3ல் மட்டும் கிணறு உள்ளதாக கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

2. செய்யூர் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மின் இணைப்பு மற்றும் மோட்டார்

அமைக்கக் கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தேன். அவ்வழக்கின் பிராது நகலை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொத்தை அளந்து பார்த்து இரண்டு புல எண்களிலும் கிணறு உள்ளதை தெரிந்து கொண்டேன். அதனைத் தெரிந்தும் இவ்வழ்ககில் புல எண். 150/6ல் கிணறு இல்லை என்று தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரிதான். புல எண்.150/3ல் 40 சென்ட் விஸ்தீரணம் உள்ளது. பிரதிவாதிகள் மேற்கண்ட புல எண்.150/3ல் விஸ்தீரணத்தில் உரிமை உள்ளதாகக் கூறி தகராறு ஏதும் செய்யவில்லை.

3. செய்யூர் வழக்கில் பிரதிவாதிகள் எதிருரை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அதுவரை இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட பின்பு அழைப்பாணையை உடனடியாக எவ்வித நடவடிக்கையும எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் புல எண்.150/3ல் மட்டும் கிணறு உள்ளதாகவும், செய்யூர் வழக்கில் இரண்டு புல எண்களிலும் கிணறு உள்ளதாக வெவ்வேறு வழக்குகளை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புல எண்.150/3ல் தான் கிணறு உள்ளது என்பதைக் காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புல எண்.150/3ல் கிணறு உள்ளது என்பதை நிரூபிக்க அடங்கல் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.3 அடங்கலில் புல எண்.150/3ல் உள்ள கிணறு தூர்ந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.3 காலத்திற்கு பிறகு உள்ள அடங்கலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. வா.த.சா.ஆ.1 "அ" பதிவேட்டில் புல எண்.150/3ல் உள்ளதாக குறிப்பு இல்லை என்று சொன்னாலும், புல எண். 150/6ல் கிணறு உள்ளதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரிதான். வா.த.சா.ஆ.3ல் 1385 பசலியில் புல எண்.150/3ல் உள்ள கிணறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1378 பசலியின்போதே புல எண்.150/3ல் கிணறு இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் புல எண். 150/6ல் கிணறு உள்ளதாக எதிருரை தாக்லக் செய்துள்ளனர் என்றால் சரிதான். புல எண். 150/6ல் மொத்தம் 60 சென்ட் என்று சொன்னால் சரிதான். புல எண் 150/6ன் பழைய பைமாஸ் நம்பர் எனக்கு தெரியாது. அந்த 60 சென்ட் இடம் பெருமாள் நாயுடு, நாகம்மாள், கிருஷ்ணசாமி, முனுசாமி, வரதராஜு மற்றும் சென்சு ஆகியோர் பெயரில் கூட்டுப் பட்டாவாக இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த 5 நபர்களும் சேர்ந்து தான் புல எண். 150/6ல் கிணறு எடுத்து அவரவர் நிலங்களில் நீர் இறைத்து பயிர் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் அந்த கிணற்றில் அந்த 5 நபர்களுக்கும் பாகம் என்று சொன்னால் சரியல்ல. அதில் பெருமாள் நாயுடு மற்றும் நாகம்மாளுக்கு பொதுவில் 24 சென்ட் பாகம் என்று சொன்னால் சரியல்ல.

5. கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு அதில் 12 சென்ட் உள்ளது என்று சொன்னால் சரிதான். வரதராஜு நாயுடு மற்றம் சென்சு நாயுடு ஆகியோருக்கு தலா 12 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான். பெருமாள் நாயுடு இறந்துவிட்டார் என்றாலும், அவரது வாரிசு அவரது சகோதரர் குப்பு நாயுடு என்ற சொன்னாலும் எனக்கு தெரியாது. கெங்கம்மாள் இறந்துவிட்டார் என்றால் வாரிசு ஏதுமின்றி இறந்துவிட்டார். அவரது கணவர்தான் குப்பு நாயுடு என்றால் சரிதான். அவர் பெருமாள் நாயுடுவின் தம்பி. அதனால் பெருமாள் நாயுடு மற்றும் கெங்கம்மாள ஆகியோரின் பாகம் குப்பு நாயுடுவிற்கு வந்து விட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. குப்பு நாயுடு மனைவி தான் நாகம்மாள் என்று சொன்னால் சரிதான். குப்பு நாயுடு மற்றம் நாகம்மாள் ஆகியோருக்கு மொத்தம் 24 சென்ட் பாத்தியம் என்றால் சரியல்ல. அதனால் குப்பு நாயுடு மற்றும் நாகம்மாள் ஆகியோர் பாகம் பிரியாத கிணற்றில் அனுபவம் செய்து

வருகிறார்கள் என்றால் சரியல்ல. குப்பு நாயுடு  மற்றும் நாகம்மாள் ஆகியோர் நீண்ட காலத்திற்கு முன்பு இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் துளசியம்மாள் மற்றம் ஜானகி ஆகியோர் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். அதன்பின்பு அவர்கள் இருவரும் அந்த சொத்தை கைப்பற்றி அனுபவம் செய்து வந்தார்கள் என்றால்சரியல்ல. துளசியம்மாள், ஜானகியம்மாள், கெங்கம்மாள், ரோசம்மாள், பத்மாவதி, 1ம் வாதி ஆகியோர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால்சரிதான்.  அந்த கூட்டுப் பட்டா எண்.360 என்றால் சரிதான்.

6. துளசியம்மாள் 1, 2 பிரதிவாதிகளின் தாயார் என்று சொன்னால் சரிதான். அவர் சுமார் 50 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்  என்றால் சரிதான். ஜானகியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர்கள் மகன்கள் துக்காராம் மற்றும் கோவிந்தன் என்று சொன்னால் சரிதான். அதனால் துக்காராம் மற்றும் கோவிந்தன் ஆகியோர்களுக்கு புல எண். 150/6ல் பாகம் பிரியாத 24 சென்ட் மற்றும்  கிணற்றில் பொதுவில் 5ல் 1 பாகம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.  பட்டாவும் பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக வருகிறது என்று சொன்னால் சரிதான். அதனால் துக்காராம் மற்றும் கோவிந்தனுக்கு வழக்குச் சொத்தில் பாகம் உள்ளது என்று சொன்னாலும், அவர்கைளை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யத் தக்கது என்றாலும் சரியல்ல.  வரதராஜு நாயுடு இறந்துவிட்டார் என்றாலும், அவருக்கு ரோசம்மள், பத்மா மற்றும் வசந்தா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். அதனால் ரோசம்மாள் மற்றும் பத்மா ஆகியோருக்கு பாகம் பிரியாத 12 சென்ட் மற்றும் கிணற்றில் 5ல் 1 பாகம் உரிமையானது என்றால் சரியல்ல.

7.  2ம் வாதியின் தகப்பனார்  வரதராஜு நாயுடுவின் 3வது பங்காளி என்றால் சரிதான். 2ம் வாதிக்கு புல எண். 150/6ல் உரிமை இல்லை என்று சொன்னால்

சரிதான். அவர் பாகம் கோரினால் வரதராஜி நாயுடு பாகத்தில் 5ல் ஒரு பாகம் தான் உரிமை கோர இயலும் என்றால் சரியல்ல. சென்சு நாயுடு 2009ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர்களது மகன்கள் முனுசாமி, ராஜகோபால், சின்னசுப்பன் மற்றும் தயாளன் என்று சொன்னால் சரிதான். சென்சு நாயுடு எனக்கு எவ்வாறு உறவினர் என்றால் நான் அவரின் சொந்த தம்பி மகன். நான் வசந்தாவின் மகளை திருமணம் செய்து கொண்டேன் என்றால்சரிதான். அதனால் வழக்குச் சொத்தில் எ்வித உரிமையும் இல்லை என்றாலும், அதனால் நான் வழக்குச் சொத்தைப் பொறுத்து 3ம் தரப்பினர் என்று சொன்னாலும் சரியல்ல. முதல் 2 வாதிகளுக்கு மட்டுமே பாகம் பிரியாத 12 சென்ட் மற்றும் கிணற்றில் 5ல் 1 பாகம் என்ற சொன்னால் சரியல்ல. உண்மைகளை மறைத்து சரியான தரப்பினரை சேர்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. முதலில் பிரதிவாதிகள் கிணற்றில் ஆயில் இன்ஜின் வைத்து நீர் இறைத்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தான் இறைத்தோம். அதனால் பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. அதனால் அவர்கள் மின் இணைப்பு பெறுவதற்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. புல எண். 150/6ல் மின் இணைப்பு வைத்து பிவிசி பைப் மூலம் நீர் இறைத்து பிரதிவாதிகள் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

9. 2019ம் ஆண்டே 1ம் பிரதிவாதி பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டது என்று சொன்னால்சரிதான். அதனால் பிரதிவாதிகள் புல எண். 150/6ல் உள்ள கிணற்றில் நீர் இறைபப்பதை நாங்கள் தடுக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் Scheme வழக்கு தான் தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. அதனால் நான் வழக்குச்

சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் தடை உத்தரவு கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. புல எண். 150/6 முழு விஸ்தீரணமும் எங்களுக்கு மட்டுமே உரிமையானது என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிணறு புல எண். 150/3ல் இலலை என்றாலம் புல எண். 150/6ல் தான் உள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும என்று சொன்னால் சரியல்ல. மின் இணைப்பை 1950ம் வருடம் வரதராஜு நாயுடு பெயரில் வாங்கப்பட்டது. எந்த புல எண்ணிற்கு பெறப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனைப் பார்த்ததால்தான் எந்த சொத்தில் மின் இணைப்பு பெறப்பட்டது என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. வழக்கில் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.